ஓய்வூதியச் சுற்று நிருபம்: 02/2014

எனது இலக்கம்: ஓய்வு/சுற்றுநிருபம்/2014
ஓய்வூதியத் திணைக்களம்,
மாளிகாவத்தை,
கொழும்பு 10.
20-02-2014.

செயலாளர், சட்டம் மற்றும் ஒழுங்கு பற்றிய அமைச்சு,
அனைத்து மாவட்டச் செயலாளர்கள்/ பொலிஸ்மா அதிபர், மற்றும்
பிரதேச செயலாளர்களுக்கு,

**பயங்கரவாத நடவடிக்கைகள் காரணமாக உயிரிழந்துள்ள மற்றும் காணாமற் போயுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்களின் தங்கி வாழ்வோரிடத்தே தங்கி வாழ்வோர் கொடுப்பனவினை வழங்குதல்.**

அமைச்சரவை விஞ்ஞாபன இலக்கம் 13/1743/564/002 மற்றும் 2013 திசெம்பர் 16 ஆந் திகதி கொண்ட அமைச்சரவைத் தீர்மானத்தின் படி பயங்கரவாத நடவடிக்கைகள் காரணமாக உயிரிழந்துள்ள மற்றும் காணாமற் போயுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்களின் தங்கி வாழ்வோரிடத்தே தங்கி வாழ்வோர் கொடுப்பனவினை வழங்குவதற்கு அரசு தீர்மானித்துள்ளது. இத் தங்கிவாழ்வோர் கொடுப்பனவுகளை வழங்குகையில் கீழ்குறிப்பிடப்படும் விதிமுறைகள் ஏற்புடையனவாகின்றன.

01. உயிரிழந்த/ காணாமற் போன உத்தியோகத்தர் விவாகமானவராகும் சந்தர்ப்பங்களில்,

1.1 விதவையிடத்தே கீழ்வரும் வண்ணம் வருடாந்தக் கொடுப்பனவொன்று உரித்தாக்கப்படும்.

| நிலை | வருடாந்தக் கொடுப்பனவு |
|---|---|
| பொலிஸ் கொஸ்தாப்பல் | ரூ. 975.00 |
| பொலிஸ் சார்ஜன்/ சார்ஜன் மேஜர் | ரூ. 1,170.00 |
| உதவிப் பொலிஸ் பரிசோதகர்/ பொலிஸ் பரிசோதகர் | ரூ. 1,500.00 |
| பிரதான பொலிஸ் பரிசோதகர் | ரூ. 1,665.00 |
| உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் | ரூ. 2,335.00 |
| பொலிஸ் அத்தியட்சகர் | ரூ. 3,000.00 |
| சிரேட்ட பொலிஸ் அத்தியட்சகர் | ரூ. 3,335.00 |
| பிரதிப் பொலிஸ்மா அதிபர்/ சிரேட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் | ரூ. 4,670.00 |

1.2 பிள்ளைகளிடத்தே

1.2.1 தாய் உயிருடனிருப்பின்
விவாகமாகாத வயது 18 வருடங்களிலும் குறைந்த ஆண் பிள்ளையொருவரிற்கு ரூ. 400.00
விவாகமாகாத வயது 21 வருடங்களிலும் குறைந்த பெண் பிள்ளையொருவரிற்கு ரூ. 400.00

1.2.1 தாய் உயிரிழந்திருப்பின்
விவாகமாகாத வயது 18 வருடங்களிலும் குறைந்த ஆண் பிள்ளையொருவரிற்கு ரூ. 665.00
விவாகமாகாத வயது 21 வருடங்களிலும் குறைந்த பெண் பிள்ளையொருவரிற்கு ரூ. 665.00

02. உயிரிழந்த/ காணாமற் போன உத்தியோகத்தர் விவாகமாகாதவராகும் சந்தர்ப்பங்களில்,

2.1 உயிரிழந்த உத்தியோகத்தர்களில் தங்கிவாழ்ந்த பெற்றோர்கள் இருப்பின் ரூ. 1,148.00 அல்லது மேலே 1.1 இல் குறிப்பிடப்படும் தொகை எனும் இரண்டில் கூடிய தொகை.

2.1.1 பெற்றோர் இருவரும் உயிரோடுள்ள சந்தர்ப்பங்களில் தங்கி வாழ்வோர் கொடுப்பனவினை அவ்விருவரிடத்தேயும் சமமாகப் பங்கீடு செய்து வழங்க வேண்டியதுடன், உயிரோடிருப்பது பெற்றோரில் ஒருவர் மட்டுமெனில் மொத்தத் தங்கி வாழ்வோர் கொடுப்பனவும் அவரிடத்தே வழங்கப்படுதல் வேண்டும்.

2.1.2 உயிரிழந்த உத்தியோகத்தர்களது பெற்றோரும் உயிரிழந்துள்ள சந்தர்ப்பங்களில் அவர்களில் தங்கி வாழ்ந்திருந்த வயது 18 வருடங்களிலும் குறைந்த விவாகமாகாத சகோதர/ சகோதரிகளிடத்தே ரூ. 375.00 ஆகும்.

03. தங்கி வாழ்வோர் கொடுப்பனவு வழங்கலானது 2013 திசெம்பர் 16 ஆந் திகதியிலிருந்து ஆரம்பிக்கப்படுதல் வேண்டும்.

04. ஏதேனுமோர் தங்கி வாழ்வோரிடத்தே நட்டஈட்டு ஒய்வூதியம் வழங்கப்படின் அக்கொடுப்பனவுகளை இச்சுற்றுநிருப ஏற்பாடுகள் அமுல்படுத்தப்படும் திகதி முதல் இடைநிறுத்துதல் வேண்டும். குறித்த திகதியின் பின்னர் அவ்வாறான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பின் தங்கி வாழ்வோர் கொடுப்பனவிலிருந்து அத்தொகைகள் அறவிடப்படுப்படுதல் வேண்டும்.

05. மீள விவாகமாகியுள்ள விதவைகளிடத்தே தங்கி வாழ்வோர் கொடுப்பனவு கிடைக்கப் பெற மாட்டாது.

06. தங்கி வாழ்வோர் கொடுப்பனவுகளுக்கான கொடைப்பத்திரங்கள் இத்திணைக்களத்தினால் வழங்கப்படுவதுடன், அதற்காகக் கீழ்குறிப்பிடப்படும் வண்ணம் கோவையினைப் பூரணப்படுத்தி அனுப்புதல் வேண்டும்.

I. பொது 55 விண்ணப்பம்.
II. உத்தியோகத்தரின் மரணச் சான்றிதழ்.
III. ஆரம்ப விசாரணை அறிக்கை மற்றும் பொலிஸ்மா அதிபரின் தீர்மானம்.
IV. விவாகச் சான்றிதழ் (உத்தியோகத்தர் விவாகமானவராயின் மட்டும்).
V. தங்கி வாழ்வோரின் மாதிரிக் கையொப்பப்படிவம் மற்றும் புகைப்படங்கள்.
VI. பிள்ளைகளின் பிறப்புச் சான்றிதழ்கள்.
VII. திறைசேரி 147, 148.
VIII. பிரதேச செயலாளரின் அறிக்கை.

**ஒப்பம்: எஸ். எஸ். ஹெட்டியாரச்சி,**
ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம்.

**பிரதிகள்:** 01. செயலாளர் - அரச நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு.
02. செயலாளர் - நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு.
03. கணக்காய்வாளர் நாயகம்.